உ
சிவமயம்



# சாவகச்சேரி - கல்வயல்
# பனிக்கண்டிக்காளி

(தலவரலாறும், பஜனைப்பாடல்களும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சாவகச்சேரி கல்வயல்

# பனிக்கண்டிக் காளி

## தலவரலாறும்

## பஜனைப்பாடல்களும்

ஆக்கம் :- வயலூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விளக்கம்

நூல் :- பனிக்கண்டிக்காளி

விடயம் :- தலவரலாறும் பஜனைப் பாடல்களும்

ஆக்கம் :- "வயலூரான்" செ.சுதாகரன்

பக்கம் :- 20

தாள் :- 70gsm

முதற்பதிப்பு :- 2018 மார்ச்

அச்சுப்பதிப்பு :- சக்தி பதிப்பகம் மீசாலை

வெளியீடு :- அப்பாக்குட்டி செல்வராஜா

பதிப்புரிமை :- வெளியீட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம ஸ்ரீ ப.ஜெகதீஸ்வர சர்மா வழங்கிய

## ஆசியுரை

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என்று போற்றப்படும் இலங்காபுரியின் வடபகுதியாம் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சியில் முக்கனிகளின் சோலை, வயல் நிலங்கள், தோட்டநிலங்கள் சூழ்ந்த பசுமை பூமியாகவும், பண்டிதர்களையும், புராணிகர்களையும் சைவத்திலும் தமிழிலும் பற்றுக்கொண்ட சைவமக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதும்கல்வயல் என்னும் திருப்பதியாகும். இங்கு பல ஆலயங்கள் இருப்பினும் வயல்கள் தோட்டங்கள் சூழ பசுமையான பனிக்கண்டிப் பகுதியில் குடிகொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் காளி அம்பாளின் பெருங்கருணையை விபரிக்க வார்த்தைகளே இல்லை.

அன்னையின் கருணையைக் கவியால் ஆராதிக்க திரு.அப்பாக்குட்டி செல்வராஜா அவர்கள் முன் வந்துள்ளமை பராட்டிற்குரியது. இவர் ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதிலும், சரீரதொண்டு செய்வதிலும்ஆலய வரலாறுகளையும் தோத்திரப்பாக்களையும் நூல் வடிவில் வெளியிடுவதிலும் அலாதி பிரியம் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது குலதெய்வமான கல்வயல் வேதவன விநாயகரது தலவரலாற்றையும் பஜனைப் பாடல்களையும் தொகுத்து "வேதவனம்" என்னும் பெயரில் நூல்வடிவமாக 2012 ம் ஆண்டில் வெளியிட்டார். இவரது தலைமகனான சுதாகரன் என்பவர் சிறந்த கவிஞர். அவரது ஆக்கத்திலேயே வேதவனம் என்னும் நூல் மலர்ந்தது. அதே போலவே திரு.செ.சுதாகரன் அவர்களது கைவண்ணத்தில் உருவான இந்நூலையும் வெளியிட்டுள்ளார். பனிக்கண்டி காளிகாம்பாளின் தலவரலாற்றையும் தோத்திரப்பாக்களையும் இணைத்து இந்நூல் வெளியிடப்படுவது சிறப்பம்சம் ஆகும். திரு.அ.செல்வராஜா அவர்களது திருப்பணிகள் தொடரவும் வெற்றியளிக்கவும், அவரது மகனான கவிஞர் செல்வராஜா சுதாகரன் அவர்களது கவித்திறன் மேலோங்கவும், காளி காம்பாளின் அனுக்கிரகம் கிடைக்கவும், கிராம மக்கள் அனைவருக்கும் அன்னை காளி அம்பாளின் திருவருள் கிடைக்கவும் அன்னையின் திருவடிகள் பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

**"லோகா சமஸ்தா சுக்கினோ பவந்து"**

பிரம்ம ஸ்ரீ ப.ஜெகதீஸ்வர சர்மா
[ஜெகன் ஐயா]
வேதவன விநாயகர் தேவஸ்தான
நித்திய குரு
கல்வயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி கல்வயல் பனிக்கண்டிக் காளியம்மன் ஆலயத்தின் தலவரலாறு

இலங்காபுரியின் சிரமென விளங்கும் வடபுல யாழ்ப்பாணத்தின் தென்பகுதியாம் தென்மராட்சியில் சாவகச்சேரி நகரத்தின் வடபாலமைந்து கல்வயல் என்னும் கவினுறுபதி விளங்குகின்றது. நாற்புறமும் வயல்வெளிகளும் தென்னை, மா, வாழை முதலிய மரங்கள் சூழ்ந்த அழகிய சோலைகள் பலவும் நிறைந்த இக்கிராமத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே தமது ஜீவனோபாயத் தொழிலாகச் செய்து வந்தாலும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக விளங்கி ஆசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும், பண்டிதர்களாகவும் , புராண மேதைகளாகவும் விளங்குகின்றனர். இங்கு வாழும் மக்கள் சைவ சமயத்தையே பின்பற்றுகின்றனர்.

இக்கிராமத்தில் பிரசித்தி பெற்று ஆலயங்களாக வேதவன விநாயகர் ஆலயம், ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம், சித்தன்மாவடிப் பிள்ளையார் ஆலயம், பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலயம், விளைவேலி மருதடி விநாயகர் ஆலயம் ,கெருடாவில் கந்தசுவாமி ஆலயம் போன்றன நித்திய நைமித்திய பூசைகளில் சிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றன. கிராமியத் தெய்வங்களாக ஆங்காங்கே ஐயனார், பைரவர் ஆலயங்களும் விளங்குகின்றன. அத்துடன் இக்கிராமியத் தெய்வங்களுக்கு வருடாந்தம் பொங்கல் மடை என்பனவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இத்தகைய சிறப்புகள் மிகுந்த கல்வயல் கிராமத்தில் இற்றைக்கு நூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்த மிகப்பெரும் விவசாயியாக வாழ்ந்த ஆறுமுகம் செல்லையா என்பவர் வயற்காணிகள், புலக்காணிகள் என ஏராளம் கொண்டவர் . இவருக்கு அம்மாக்குட்டி என்னும் மங்கை நல்லாளை மனையாளாக்கி இல்லறத்தில் இணைத்து வைத்தனர் பெரியோர். இவர்களது சிறந்த இல்லறவாழ்வின் பயனாக இவர்களுக்குக் கிடைத்த ஆண் குழந்தைக்கு சுந்தரம் எனப் பெயர் சூட்டிப் பெற்றோர் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர். இந்நிலையில் செல்லையா அவர்களது மிகப்பெரும் விசாலமான பனிக்கண்டி என்னும் பெயருடைய காணிக்குள் ஒரு பெரிய கொட்டுடைய மாமரம் இருந்தது. அந்தக் கொட்டுக்குள்ளே காளி என்னும் தெய்வம் இருப்பதான பெரியோரின் நம்பிக்கையுடன் கற்பூரதீபம் ஏற்றி இளநீர் உடைத்து வழிபட்ட பின்னரே அக் காணிக்குள் புகுவது அவர்களது வழமையானதொரு செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக வளர்ந்து வந்த சுந்தரம் திருப்பதி என்னும் திருமங்கையை மணந்து இல்லறம் என்னும் நல்வாழ்வில் இணைந்து ஒரு பெண் மகவையும் மூன்று ஆண் மக்களையும் பெற்று மகிழ்ந்தனர். இவ்வேளையில் செல்லையா, அம்மாக்குட்டி என்போர் இறைபதம் அடைந்தனர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் தமது மூத்த மகனை இவர்கள் இழக்க வேண்டி ஏற்பட்டது. அத்துடன் இவர்கள் குடும்பமாக இடம்பெயர்ந்து வன்னிப்பெருநிலப் பரப்பில் வாழ்ந்து வந்தனர். அங்கேயே சுந்தரம் என்பவர் இறைபதம் அடைந்தார். நாட்டு நிலைமை ஓரளவு சீரானவுடன் மீளவும் கல்வயலை வந்தடைந்த சுந்தரத்தின் புதல்வர்கள் பாதிக்கப்பட்ட தமது இல்லத்தில் தங்கியிருந்த வேளையில் தாயாரான திருப்பதியும் இறைபதம் அடைந்தார்.

இதன் பின்னர் சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் கிராம்புவில் வயல் வெளிக்கு மேற்குப் புறமாகவும் வேதவனப் பிள்ளையார் ஆலயத்திற்கு கிழக்குப் புறமாகவும் கிராம்புவிலையும் மானாவளையையும்

இணைக்கும் வாய்க்கால் கரையோரமாகவும் அமைந்துள்ள பனிக்கண்டிக் காளியின் நல்லருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வாழ்விலும் வசந்தம் வீச ஆரம்பித்தது. செல்லையா அம்மானின் பேரப்பிள்ளைகளான இவர்கள் தமக்கு நல்லருள்பாலிக்கும் காளி ஆச்சிக்கு ஓர் இருப்பிடம் அமைக்க வேண்டும் எனவெண்ணி ஓர் ஓலைக்கொட்டிலை அமைத்து விளக்கேற்றி வழிபட்டனர். இதன்பயனாக காளி ஆச்சியின் கருணைமழை பெருகி வாழ்வில் முன்னேற்றம் அடைந்தனர்.

இதன் பயனாக ஓலைக்கொட்டில் சீமெந்துக் கட்டிடமாக வளர்ச்சி கண்டது. ஆகம விதிப்படி அமைந்த ஆலயமாக மிளிர்ந்தது. தற்போது வெள்ளி, செவ்வாய் மற்றும் அம்பாளின் விசேட தினங்களான பங்குனித்திங்கள், ஆடிப்பூரம் போன்ற தினங்களில் அதிவிசேடமாக பொங்கல் பூசை, அன்னதானம் என்பன நடாத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் வளர்ச்சிப் பாதையின் ஒரு மைல்கல்லாக செல்லையா அம்மானின் பரம்பரையினர் மட்டுமல்லாது கல்வயல் கிராமத்தவர்கள் பெரும்பாலானோரின் வணக்கஸ் தலமாக காளி ஆச்சியின் ஆலயம் மிளிர்கின்றது.

இக்காலப் பகுதியில் காளி ஆச்சியின் கருணையின்பால் ஈர்க்கப்பட்ட ஓர் அன்பர் தன்னுடைய விருப்பத்தின் பேரில் தன்னுடைய சொந்தச் செலவில் ஒரு சிறிய ஆலயத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிலமைத்து அதில் கண்ணன் ( கிருஷ்ணன்) உருவத்தை வைத்து காளி ஆச்சியுடன் பரிவார மூர்த்தியாக அமர்த்தி வழிபடத் தொடங்கினர். காளி ஆச்சியின் நல்லருள் மேலும் விரிவடைந்து செல்கின்றது.

தற்போது இவ்வாலயம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுக் காட்சிதருகின்றது. காளி ஆச்சியின் கருணை கல்வயல் கிராம மக்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது. இவ்வாலயம் மேன்மேலும் வளர்ச்சி கண்டு காளியின் நல்லருளால் கிராம மக்கள் எவ்வித இடையூறுமின்றி நீண்டநாள் வாழவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

காத்திடுவாய் காத்திடுவாய் கணபதியே காத்திடுவாய்
காளியம்மன் துதிபாடக் கணபதியே காத்திடுவாய்
ஏத்துகிறோம் உன்பாதம் எமைஏரம்பா காத்திடுவாய்
எங்கள் காளியினை ஏத்திடவே யருள்தருவாய்

ஏறுமயில் வாகனனே எழில்வேலா காத்திடுவாய்
என்றும் துதிபாட ஏற்றுமே காத்திடுவாய்
ஆறுமுகம் ஆனவனே அன்புடனே காத்திடுவாய்
ஆண்டியென ஆனவனே அன்புடனே காத்திடுவாய்

கார்மேக வண்ணனே கருத்துடனே காத்திடுவாய்
காளியம்மன் துதிபாடக் கண்ணா காத்திடுவாய்
பார்மிசை யுனைப்பாடிப் பரவுகின்றோம் காத்திடுவாய்
பனிக்கண்டிக் காளியினைப் பாடிடக் காத்திடுவாய்

கல்வயலாம் பதிதன்னில் கவினுறவே வந்தமர்ந்த
காளியம்மா காத்திடுவாய் கருத்துடனே காத்திடுவாய்
சொல்லாலே உனைப்பாடித் துதிக்கின்றோம் காத்திடுவாய்
சூழ்புவியின் துயரகற்றித் தூயவளே காத்திடுவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளியம்மா

பணிக்கண்டிப் பதியமர்ந்த காளியம்மா
பக்தர்குறை தீர்த்திடம்மா காளியம்மா
நனிதுயரம் நாமடைந்தோம் காளியம்மா
நாடியெமைக் காத்திடம்மா காளியம்மா

நூற்றாண்டாய் இங்குள்ளாய் காளியம்மா
நோய்நொடியிற் காத்திடம்மா காளியம்மா
போற்றியுனைப் பாடுகின்றோம் காளியம்மா
பொற்கரத்தால் நீயருள்வாய் காளியம்மா

கொடுவாளைக் கையிலேந்திக் காளியம்மா
கொடியவரை அழித்திடம்மா காளியம்மா
வடுவின்றி நாம்வாழக் காளியம்மா
வழியொன்று காட்டிடம்மா காளியம்மா

பட்டதுயர் போதுமம்மா காளியம்மா
பாவியரைக் காத்திடம்மா காளியம்மா
விட்டகுறை பொறுத்திடுவாய் காளியம்மா
விரும்பியெமைக் காத்திடம்மா காளியம்மா

நித்தநித்தம் உனைத்தொழுதோம்காளியம்மா
நின்னடியே சரணடைந்தோம் காளியம்மா
பத்திரமாய்க் காத்தருளும் காளியம்மா
பணிகின்றோம் உந்தனடி காளியம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமழை பொழியவேண்டும் காளியம்மா
மக்கள்மனம் குளிரவேண்டும் காளியம்மா
பேரிடரில் காத்திடம்மா காளியம்மா
பெருவாழ்வு தந்திடம்மா காளியம்மா

நம்பியுனைச் சரணடைந்தோம் காளியம்மா
நலமருளிக் காத்திடம்மா காளியம்மா
அம்பிகையின் மறுவடிவே காளியம்மா
அல்லல்தனைத் தீர்த்திடம்மா காளியம்மா

கல்வயலில் குடிகொண்ட காளியம்மா
கலக்கமின்றிக் காத்திடம்மா காளியம்மா
நெல்வயல்கள் சூழவுண்டு காளியம்மா
நிலையின்பம் தந்திடம்மா காளியம்மா

## காளித்தாயே

கல்வயலாம் பதியமர்ந்த காளித்தாயே
கவலைகளைத் தீர்த்திடம்மா காளித்தாயே
சொல்லவொண்ணாத் துயரங்கள்காளித்தாயே
சோர்ந்திடாமற் காத்திடம்மா காளித்தாயே
அல்லலுற்றோம்உனைப்பணிந்தோம்காளித்தாயே
அருள்தந்து காத்திடம்மா காளித்தாயே
வல்வினையால் வாடுகின்றோம் காளிததாயே
வரந்தந்து காத்திடம்மா காளித்தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையெனஉ னைப்பணிந்தோம்காளித்தாயே
அவனிமிசை ஏத்திடம்மா காளித்தாயே
என்னகுறை நாம்செய்தோம் காளித்தாயே
எடுத்தெமக்கு உரைத்திடம்மா காளித்தாயே
உன்னருளை நாடிவந்தோம் காளித்தாயே
உவந்தெம்மைக் காத்திடம்மா காளித்தாயே
முன்னைவினை தீர்த்திடம்மா காளித்தாயே
முன்வந்து காத்திடம்மா காளித்தாயே

பங்குனியிற் பொங்கலிட்டோம் காளித்தாயே
பாரிலெம்மைக் காத்திடம்மா காளித்தாயே
எங்கள்குறை தீர்த்திடம்மா காளித்தாயே
ஏற்றம்தந்து காத்திடம்மா காளித்தாயே
சங்கடங்கள் தீர்த்தருளும் காளித்தாயே
சார்ந்ததுயர் தீர்த்திடம்மா காளித்தாயே
செங்குருதி சிந்திவிட்டோம் காளித்தாயே
சேதமின்றிக் காத்திடம்மா காளித்தாயே

அஞ்சலென அருள்தருவாய் காளித்தாயே
அண்டினோரைக் காத்திடம்மா காளித்தாயே
தஞ்சமென உனையடைந்தோம் காளித்தாயே
தண்ணருளே தந்திடம்மா காளித்தாயே
வஞ்சகர்கள் விரட்டுகின்றார் காளித்தாயே
வடுவின்றிக் காத்திடம்மா காளித்தாயே
வெஞ்சமரால் வாடிநின்றோம் காளித்தாயே
வேதனைகள் தீர்த்திடம்மா காளித்தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரத்தின் பிள்ளைகள் மீது வீசத்தொடங்கியது.
பனிக்கண்டிப் பதியமர்ந்த காளித்தாயே
பக்தர்குறை தீர்த்திடம்மா காளித்தாயே
நனிதுயரம் நாமடைந்தோம் காளித்தாயே
நலந்தந்து காத்திடம்மா காளித்தாயே
தனித்துநின்று வருந்துகின்றோம் காளித்தாயே
தாங்கியெமைக் காத்திடம்மா காளித்தாயே
இனித்துன்பம் வந்திடாமல் காளித்தாயே
இருந்தெம்மைக் காத்திடம்மா காளித்தாயே

## காளியாத்தா

அசுரர்களை அழித்திடவே காளியாத்தா
அவனிதனில் வந்தவளே காளியாத்தா
விசும்பியழும் எங்களையே காளியாத்தா
விரும்பிவந்து காத்திடம்மா காளியாத்தா
ஆயிரங்கண் உடையவளே காளியாத்தா
அருள்தந்து காத்திடம்மா காளியாத்தா
எட்டுக்கரங் கொண்டவளே காளியாத்தா
ஏதமின்றிக் காத்திடம்மா காளியாத்தா
பட்டதுயர் போக்கிடம்மா காளியாத்தா
பாரிலெம்மைக் காத்திடம்மா காளியாத்தா
உக்கிரமாய் எழுந்தவளே காளியாத்தா
உவந்தெம்மைக் காத்திடம்மாகாளியாத்தா
அக்கிரமந் தனையழிப்பாய் காளியாத்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியர்குறை தீர்த்திடம்மா காளியாத்தா
பனிக்கண்டிப் பதியமர்ந்த காளியாத்தா
பாங்குடனே காத்தருள்வாய் காளியாத்தா
மனிதகுலம் மேன்மையுறக் காளியாத்தா
மனமுருகியருள் தருவாய் காளியாத்தா
உலகத்தின் நாயகியே காளியாத்தா
உன்பாதம் சரணடைந்தோம் காளியாத்தா
கலக்கந்தனைத் தீர்த்திடம்மாகாளியாத்தா
கல்வயலைக் காத்திடம்மா காளியாத்தா
விருப்புடனே பூசையிட்டோம் காளியாத்தா
வேண்டும்வரம் தந்திடுவாய் காளியாத்தா
செருக்களங்கள் கண்டவளே காளியாத்தா
சேய்களைமைக் காத்திடம்மா காளியாத்தா
அவல்கடலை சுண்டலோடு காளியாத்தா
அன்னதானம் நாமளித்தோம் காளியாத்தா
பவவினைகள் தீர்த்திடம்மா காளியாத்தா
பரிந்தருளே தந்திடம்மா காளியாத்தா
மலர்கொண்டு தினம்பணிந்தோம் காளியாத்தா
மனக்குறைகள் தீர்த்திடம்மா காளியாத்தா
அர்ச்சனைகள் நிகழ்த்திநின்றோம் காளியாத்தா
அல்லல்தனை நீக்கிடுவாய் காளியாத்தா
தோப்பினிலே அமர்ந்தவளே காளியாத்தா
தொண்டர்குறை தீர்த்திடம்மா காளியாத்தா
ஊழிக்கூத்து ஆடினாயே காளியாத்தா
உமையவளின் மறுவடிவே காளியாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிசூழ்ந்த உலகினிலே காளியாத்தா
அல்லல்மிக நாமுற்றோம் காளியாத்தா
எங்கள்பூசை ஏற்றிடம்மா காளித்தாயே
எதுவரினும் காத்திடம்மா காளித்தாயே
தினம்தினமும் உனைப்பணிந்தோம்காளியாத்தா
தீராத்துயர் தீர்த்திடம்மா காளியாத்தா
உனதடியைப் போற்றிடுவோம் காளியாத்தா
உவகையோடு காத்திடம்மா காளியாத்தா
எமைமறந்து உனைப்பணிந்தோம் காளியாத்தா
எங்கள்குறை தீர்த்திடம்மா காளியாத்தா

## காத்திடம்மா காளியம்மா

அம்மா பனிக்கண்டிப்பதிக் காளியம்மா அம்மா காளியம்மா
எம்மைப் பரிவுடனே நீயும் காத்திடம்மா
நீயும் காத்திடம்மா
அம்மா நனிதுன்பம் நாமடைந்தோம் காளியம்மா
அம்மா காளியம்மா
எம்மை நாடிவந்து நீயும் காத்திடம்மா
நீயும் காத்திடம்மா
அம்மா பொங்கலிட்டு நாமும் பூசை செய்தோம்
நாமும் பூசை செய்தோம்
எங்கள் குறைகளெல்லாம் நீயும் தீர்த்திடம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் தீர்த்திடம்மா
அம்மா நீர்க்கஞ்சி நாமும் படைத்து வைத்தோம்
நாமும் படைத்து வைத்தோம் எங்கள்
நீண்டதுயர் நீயும் தீர்த்திடம்மா நீயும்
தீர்த்திடம்மா
அம்மா ஊர்கூடி உனக்குப் பொங்கலிட்டோம்
உனக்குப் பொங்கலிட்டோம்
உயர்வாழ்வு நமக்குத் தந்திடம்மா நீயும்
தந்திடம்மா
அம்மா கல்வயலில் வந்தமர்ந்த காளியம்மா
அம்மா காளியம்மா
எங்கள் கவலையெல்லாம் நீயும் தீர்த்திடம்மா
நீயும் தீர்த்திடம்மா
அம்மா கணபதியும் உன்னருகே காளியம்மா
அம்மா காளியம்மா
கந்தனுடன் சேர்ந்தே உள்ளாயம்மா
நீயும் உள்ளாயம்மா
அம்மா காத்திடம்மா காத்திடம்மா காளியம்மா
அம்மா காளியம்மா
எம்மைக் கருத்துடனே நீயும் காத்திடம்மா
நீயும் காத்திடம்மா
அம்மா ஏத்தியுனைப் பாடுகின்றோம் காளியம்மா
அம்மா காளியம்மா
எங்கள்குறை நீயும் தீர்த்திடம்மா
அம்மா தீர்த்திடம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உன்பாதம் சரணடைந்தோம்
காளியம்மா அம்மா காளியம்மா
எமக்குற்றதுயர் நீயும் தீர்த்திடம்மா
நீயும் தீர்த்திடம்மா
அம்மா நின்னடியே நாமும் நாடிவந்தோம்
நாமும் நாடிவந்தோம்
எமக்கு நிறைவாழ்வு நீயும் தந்திடம்மா
நீயும் தந்திடம்மா
அம்மா பனிக்கண்டிப் பதிக்காளியம்மா அம்மா
காளியம்மா
பக்தர்தமை நீயும் காத்திடம்மா
நீயும் காத்திடம்மா

## காளியம்மன் போற்றி

ஓம் அன்பர்க்கருள் அம்மா போற்றி
ஓம் ஆபத்தகற்றும் அன்னாய் போற்றி
ஓம் இன்னலகற்றும் இறையே போற்றி
ஓம் ஈனரையழிக்கும் ஈஸ்வரியே போற்றி
ஓம் உக்கிரவடிவானவளே போற்றி
ஓம் உமையவள் மறுவடிவே போற்றி
ஓம் ஊழிக்கூத்தாடினாய் போற்றி
ஓம் எமையாளும் இறையே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஏதிலார்கருள் இறையே போற்றி
ஓம் ஐயம்தீர்க்கும் அன்னாய் போற்றி
ஓம் ஒற்றுமை காக்கும் உருவாய் போற்றி
ஓம் ஓதுவார்க்கருள் தருவாய் போற்றி
ஓம் ஔவியம் தவிர்ப்பாய் போற்றி
ஓம் கல்வயலைக் காப்பாய் போற்றி
ஓம் காசினியாளும் தாயே போற்றி
ஓம் தரணியாளும் தாயே போற்றி
ஓம் தீங்குகள் அகற்றும் திருவே போற்றி
ஓம் பனிக்கண்டிக் காளியம்மா போற்றி
ஓம் பத்திரகாளித் தாயே போற்றி
ஓம் பாவந் தீர்க்கும் பரையே போற்றி
ஓம் மனுக்குலம் காக்கும் மாதா போற்றி
ஓம் போற்றி போற்றி உன் பொற்பாதம் போற்றி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவரிடமிருந்து இதுவரை.....

1. பாலர் பாடல் திரட்டு - 1997
2. வேதவனம் - 2012
3. வேதவனவிநாயகர் பிள்ளைத்தமிழ் - 2013
4. வயலூரானின் வரிகள் - 2016
5. நெஞ்சுறுத்தும் நிஜங்கள் - 2017





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தி பதிப்பகம் மீசாலை – 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org